# DAY 1 — THURSDAY, 2 APRIL 2026

## SESSION 2 : THE SOIL OF THE HEART

**TIME:** 8:00 PM – 9:00 PM




மையக் கருத்து:நம் வாழ்க்கையில் தேவனுடைய வார்த்தையின் “அறுவடை” என்பது விதையின் தன்மையை விட மண்ணின் (இதயத்தின்) நிலைமையை அதிகமாகப் பொறுத்துள்ளது என்பதை உணருதல்.

**1. ஏற்றுக்கொள்ளாத இருதயம்**

இடையறாத “நெரிசல்” காரணமாக மண் இறுக்கமாகிப் போனால், விதை அதன் மேற்பரப்பை ஊடுருவி உள்ளே செல்ல முடியாது.

**மத்தேயு 13:3-4, 19**

உலக வழிகளில் நடப்பதாலும், அகந்தையாலும், சந்தேக மனப்பான்மையாலும் கடினமடைந்த இருதயம்.

**எரேமியா 4:3-4**

“உங்கள் உழாத நிலத்தை உழுங்கள்; முட்களுக்கிடையில் விதையிடாதீர்கள்.”

பார்வோன். மறுக்க முடியாத பத்து அதிசயங்களை கண்டிருந்தபோதிலும், அவரது இதயம் மிகவும் “கடினமடைந்திருந்ததால்”, (மோசே மூலம் அறிவிக்கப்பட்ட தேவனுடைய வார்த்தை) அதில் வேர் விட முடியவில்லை. அவர் தேவனுடைய வல்லமையை கண்டார்; ஆனால் மனந்திரும்பும் உணர்வு அவருக்குள் எழவில்லை.

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

“**அதிக சிந்தனைகள் கொண்ட”இருதயம்.** ஒரு நகரப் பூங்காவை நினைத்துப் பாருங்கள். அதில் புல் வளரும் பகுதிகள் இருக்கும். ஆனால் மக்கள் அடிக்கடி நடந்து சென்ற “குறுக்குவழிகள்” இருக்கும்; அங்கு புல் வாடி, மண் இறுகிய சிமெண்ட் கலவையை போல கடினமாகி விடுகிறது. அவ்வள இறுக்கமாகிவிட்ட அந்த இடத்தை மண்வெட்டி கூடஎளிதில் ஊடுருவ முடியாது.

**ஒத்ததன்மை**: ஒரு சபை தலைவரால் ஆழமாக காயப்படுத்தப்பட்ட ஒருவரை நான் அறிந்திருந்தேன். தன்னை தட்கத்துக்கொள்ளும் நோக்கில், அவர் இதயத்தில் நையாண்டி மன்னபன்மையை தனது வெளிப்பாட்டின் பாதையாக அமைத்துக் கொண்டார். யாராவது அவருடன் ஒரு தேவ வசனத்தைப் பகிர்ந்தால், அது பாதையில் விதை போட்டதுபோல் இருந்தது. அது பைபிள் “தவறு” என்பதினால் முளைக்காமல் இருந்தது என்பதிலை; அவரது இதயம் கசப்பால் "பதனிடப்பட்டிருந்ததால்” வசனம் உள்ளே செல்ல முடியவில்லை.

**பாடம்**:கடினமடைதல் பல நேரங்களில் ஒரு தற்காப்பு முறையாகும்.

நாம் தேவனிடம் நம் இதயத்தின் மண்ணை "உழுது மென்மையாக்க" வேண்டிக் கொள்ள வேண்டும்; அது பொதுவாக உண்மையான மனந்திரும்புதலின் கண்ணீரின் மூலம் நடைபெறுகிறது.

______________________________________________

______________________________________________

______________________________________________

**2. பாறை நிலம்: ஆழமற்ற இதயம்**

மண் மேல்புறத்தில் நல்லதாகத் தோன்றினாலும், அதன் அடியில் உள்ள சுண்ணாம்புக்கல் / கற்களினால் அடுக்கு வேர் ஆழமாகப் போகாமல் தடுக்கிறது.

**மத்தேயு 13:5-6, 20-21**

ஆவிக்குரிய ஆழமில்லாத உணர்ச்சி சார்ந்த விசுவாசம். ஆரம்பத்தில் மகிழ்ச்சியாக இருந்தாலும், அழுத்தம் வந்தால் வாடிப் போகிறது.

**ஓசியா 10:12,** "உங்களுக்குள்ளாக நீதியை விதையுங்கள்; அழியாத அன்பின் கனியை அறுவடை செய்யுங்கள்."

**யேசுவைத் தொடர்ந்து வந்த கூட்டம்**

ஐந்தாயிரம் பேருக்கு உணவு வழங்கிய பொழுது (நம்பிக்கையின் ஒளி) ஆயிரக்கணக்கானோர் உற்சாகமாக வாழ்த்தினார்கள், ஆனால் சிலுவையைப் பற்றிய கடினமான உண்மைகளை இயேசு போதித்தபோது, அவர்களில் பெரும்பாலோர் "பின்வாங்கி அவரைப் பின்தொடரவில்லை. **(யோவான் 6:66).**

**ஒரே பாடலால் புகழ்பெற்ற இசைக்கலைஞர்.** ஒரு புகழ்பெற்ற பாடலை/படைப்பை ஒரே இரவில் பிரபலமாக்கி, கவனத்தை ஈர்க்க விரும்புகிறார்கள்.அதன் பிறகு பெரிய வெற்றிகள் எதையும் பெறாத கலைஞர் உள்ளனர். ஏனென்றால் அவர்கள் ஸ்வரங்களின் வரிசையை (இசை அளவை / பண் வரிசை) பயிற்சி செய்யாததினால், கலை முறையை அதாவது பெரிய அளவை மற்றும் சிறு அளவை ஆகிய வகைகளை முறைப்படி பயிலததினால்,மேலும் எந்த "ஆய்வும்", “ஆழமும்” இல்லாததால், ஒரு மோசமான மதிப்பாய்வு வெளிவரும் போது அவர்கள் மறைந்து விடுகிறார்கள்.

**ஒத்ததன்மை**:

பலர் கிறிஸ்தவ முகாம் அல்லது பெரிய உணர்ச்சி நிறைந்த இசை நிகழ்ச்சிக்கு செல்கிறார்கள். அவர்கள் அழுகின்றனர், உற்சாகப்படுகின்றனர், மற்றும் “மகிழ்ச்சியுடன் வார்த்தையை ஏற்றுக்கொள்கிறார்கள்” (மத்தேயு 13 இல் கூறப்பட்டபடி). ஆனால் திங்கட்கிழமை, குடும்பத்தில் ஒருவர் நோய்ப்பட்டால் அல்லது நண்பர் அவர்களை வம்பிழுத்தால் / கிண்டலடித்தால், அவர்கள் சோர்ந்து விடுகிறார்கள். அவர்களது விசுவாசம் உணர்ச்சிகளில் இருக்கின்றது; அடித்தளத்தில் இல்லை.



**பாடம்:** விசுவாசம் என்னும் வேர், மலை உச்சி அனுபவத்தின் வெளிச்சத்தில் அல்ல, இருண்ட, அமைதியான நேரங்களில் தனிப்பட்ட பிரார்த்தனையிலேயேஅது வளரும்.

**3. முட்களுள்ள மண்: திசை திருப்பப்பட்ட இருதயம்**

மண் செழிப்புடையதாக இருந்தாலும், அது அதிக நெரிசலாக இருப்பதினால், தேவனுடைய வார்த்தை மற்ற "செடிகளுடன்" (எண்ணங்களுடன்) போட்டியிட வேண்டிய நிலை உருவாகிறது.

**மத்தேயு 13:7, 22**

இந்த வாழ்க்கையின் கவலைகள் மற்றும் செல்வத்தின் ஏமாற்றம்.

**நீதிமொழிகள் 4:23** "எல்லாவற்றையும் விட உங்கள் இதயத்தை காத்துக்கொள்ளுங்கள்; ஏனெனில் நீங்கள் செய்வதெல்லாம் அதிலிருந்தே புறப்படுகிறது."

**செல்வமுள்ள இளம் ஆட்சியாளர்.** அவர் உண்மையாகவே இயேசுவைப் பின்பற்ற விரும்பினார் (விதை வளர்ந்து கொண்டிருந்தது). ஆனால் அவரது "முட்கள்" (சொத்துக்களின்மீது கொண்ட அன்பு) மிகவும் அடர்த்தியாக இருந்ததால், முழுமையாக அர்ப்பணிக்கக் கூடிய அவரது திறனை நெரித்து விட்டது. அவர் துக்கத்துடன் திரும்பிப் போனார்.

**குட்சு வைன்.** அமெரிக்காவின் தெற்கு பகுதிகளில் “குட்சு” எனப்படும் ஒரு செடி உள்ளது. அது மிகவும் வேகமாக வளரும். அது மற்ற மரங்களை “தாக்கி” கொல்லாது; அவற்றின் மேல் பரவி வளர்ந்து, சூரிய ஒளியை மறைத்து, மண்ணிலுள்ள அனைத்து ஊட்டச்சத்துகளையும் உறிஞ்சி விடும். இறுதியில், அசல் மரம் மூச்சுத்திணறி வாடிப்போகும்.

**ஒத்ததன்மை**:

ஒரு பெண் ஒருமுறை தனது சபை ஊழியரிடம், “நான் தேவனை நேசிக்கிறேன்; ஆனால் ஜெபிக்க நேரமில்லை” என்று கூறினார். அவர் தங்கி வாழ நேரமில்லாத ஒரு வீட்டிற்காக வாரத்திற்கு 60 மணி நேரம் வேலை செய்தார்; “மனஅழுத்தத்தை குறைக்க” ஒவ்வொரு இரவும் 3 மணி நேரம் மொபைலில் ஸ்க்ரோல் செய்துக்கொண்டிருந்தால்; மேலும் தனது குழந்தைகளின் விளையாட்டு அட்டவணைகள் குறித்து கவலைப்பட்டார். அவருடைய இதயம் “தீயது” அல்ல — அது வெறுமனே நிரம்பி வழிந்தது. நவீன பரபரப்பின் “குட்சு செடி” அவரது ஆவிக்குரிய வாழ்க்கையை மூச்சுத்திணறச் செய்தது.

**பாடம்**:

முட்கள் என்பது “நியாமான” விஷயங்கள்தான் (பணம், தொழில், வீட்டுப் பொறுப்புகள்); ஆனால் அவை “முக்கியமானதாக" மாறும்போது பிரச்சினை உருவாகிறது. பழம் வளர வேண்டுமெனில், தோட்டத்தில் உள்ள களைகளை நீங்கள் அகற்ற வேண்டும்.

### 4. உருமாற்றம்: ஒரு புதிய இதயத்தைப் பெறுதல்

எப்பொழுதும் நம் மண்ணை நாமே சரி செய்ய முடியாது; சில நேரங்களில் நமக்கு "மாற்று மண்" தேவைப்படும் .

**எசேக்கியேல் 36:26-27**

தேவன் “கல்லான இதயத்தை” அகற்றி, “மாம்சமான இதயத்தை” அளிக்கிறார்.

**சங்கீதம் 51:10-12**

“தேவனே, என்னுள் சுத்தமான இதயத்தை உருவாக்கும்”

தர்சுவின் சவுல் (பவுல்) அவர் ஒரு “கடினமான பாதை” போல இருந்தார் (திருச்சபையை துன்புறுத்தியவர்). தேவன் அவரை உழு மட்டுமல்லாமல், தமஸ்கு செல்லும் வழியில் அவருக்கு முற்றிலும் புதிய இதயத்தையும் அளித்தார்.

சிறைச்சாலைகளின் "சிங்கம்". நியூயார்க் நகரில் மிகவும் பெயர் பெற்ற கும்பல் தலைவராக இருந்த நிக்கி க்ரூஸின் வாழ்க்கையை நினைத்துப் பாருங்கள். அவரது இதயம் மிகவும் “கடினமானதாக/கல்லானதாக” இருந்ததால், ஒருமுறை ஒரு பிரசங்கியிடம், “நான் தேவனை நம்புவதில்லை; நீ என்னை அணுகினால், உன்னை கொன்று விடுவேன்” என்று கூறினார். அவர் முழுமையான வன்முறையால் நிரம்பிய மனிதர். ஆனால் அவர் இறுதியில் கிறிஸ்துவின் அன்பை சந்தித்தபோது, அது ஒரு “பழுது பார்த்தல்” அல்ல — ஒரு “மாற்றீடு” இருந்தது. அவர் மென்மைக்காக அறியப்பட்ட உலகப் புகழ்பெற்ற சுவிசேஷகராக மாறினார்.

**பாடம்**:
உங்கள் கல்லான இதயத்தை நீங்களே “மென்மையாக்க” முடியாது. மகா வைத்தியரிடத்தில் சென்று, “தேவனே, என்னுள் சுத்தமான இதயத்தை உருவாக்கும்” என்று வேண்டிக்கொள்ள வேண்டும்.
கலாத்தியர் 5:22-23



5. நல்ல மண்: கனிதரும் இதயம்
கேட்டு, புரிந்து, செயல்படும் இருதயம்.

**மத்தேயு 13:8, 23**
விதைக்கப்பட்டதை விட முப்பது, அறுபது, அல்லது நூறு மடங்கு அறுவடை.

**கலாத்தியர் 5:22-23**
ஆவியின் கனிகள் — நல்ல மண்ணின் சான்று.

**பெத்தானியா மரியாள்**
மற்றவர்கள் "பிஸியாக" (முள்ளுகளால்) இருந்தபோது, அவள் இயேசுவின் பாதங்களருகில் அமர்ந்து வார்த்தையை உட்கொண்டாள். அவளின் "மண்" மிகவும் தயார் நிலையில் இருந்ததால், இயேசு இறக்கப் போகிறார் என்பதை புரிந்துகொண்ட ஒரே நபராக இருந்து, முன்கூட்டியே அவரை அடக்கத்திற்காக அபிஷேகம் செய்தாள்.



**எட்வர்ட் கிம்பாலின் பாரம்பரியம்**

எட்வர்ட் கிம்பால் ஒரு தாழ்மையான, ஞாயிற்றுக்கிழமைப் பள்ளி ஆசிரியர். அவரிடம் "நல்ல மண்" இருந்தது. ஒரு காலணிக் கடையில் வேலை செய்துக் கொண்டிருந்த ஒரு இளைஞனைச் சந்தித்து, இயேசுவைப் பற்றி சொல்ல வேண்டும் என்று அவர் தீர்மானித்தார். அந்த இளைஞன் தான் டி.எல். மூடி — பின்னர் வரலாற்றில் மிகப் பெரிய சுவிசேஷகரில் ஒருவராக ஆனார்.மூடி பின்னர் எப்.பி.மெயரிடம் தாக்கத்தை ஏற்படுத்தினார்; மெயர் வில்பர் சாப்மானிடம் தாக்கத்தை ஏற்படுத்தினார்;சாப்மான் பில்லி சண்டேயிடம்தாக்கத்தை ஏற்படுத்தினார்; அவரின் தாக்கம் இறுதியில் பில்லி கிரஹாமை கிறிஸ்துவினிடத்தில் நடத்திவந்த மனிதரையும் பாதித்தது.



**ஒத்ததன்மை** எட்வர்ட் கிம்பாலின் “நல்ல மண்ணில்” விதைக்கப்பட்ட ஒரு “விதை”, 150 ஆண்டுகளாக கோடிக்கணக்கான மக்களை சென்றடைந்த அறுவடையை உண்டாக்கியது.

**பாடம்**

“நல்ல மண்” ஆக இருக்கப் புகழ்பெற்றவராக இருக்க வேண்டிய அவசியமில்லை; ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மை இருந்தால் போதும். தயாராகிய இதயத்தில் செய்யப்பட்ட ஒரு சிறிய கீழ்ப்படிதல் செயல், தலைமுறைகள் முழுவதும் உலகத்தை மாற்றக்கூடும்.




Goals

To Do